IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 33/2015

Deposition of witness for prosecution : PW9

Defense :

Name : பாண்டியன்

Father's Name : ஆறுமுகம்

Village : அடையபுலம்

Taluk : ஆரணி

Caste :

Calling : போட்டோகிராபர்

Religion :

Age : 44

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 01.08.2025.

**குறுக்கு விசாரணை**

**1ம் எதிரி ஆஜர். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 எதிரிக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

1. நான் தற்போது பத்திரிக்கையாளராக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். எந்த பத்திரிக்கையில் பணிபுரிகிறேன் என்றால் தமிழன் செய்திகள் பத்திரிக்கையில் பணிபுரிகிறேன். பத்திரிக்கையாளராக பணி செய்வதால் அடிக்கடி காவல் நிலையத்திற்கு செல்வேன் என்றால் சரிதான். என்ன வழக்கு என்ன சங்கதி என்ற விவரம் தெரியாமல் கையொப்பம் செய்தேன் என்றால் நான் போகும் போது வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள் அதற்காக கையொப்பம் செய்தேன். அதன் பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்தில் விசாரணை செய்த போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. போலீசார் எனக்கு பழக்கம் என்பதால் போலீசார் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.